

(பத்தாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 4(12).]

பாராளுமன்றத்தின்
4 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

2026 நவம்பர் 14, சனிக்கிழமை வெளியிடப்பட்டது

2026 நவம்பர் 21, சனிக்கிழமை

பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— குறைநிரப்புத் தொகை,— செலவினத் தலைப்பு 240 - நிகழ்ச்சித்திட்டம் 02 — †2027 சனவரி 01 ஆம் திகதியில் தொடங்கி 2027 திசெம்பர் 31 ஆம் திகதியில் நிறைவடைகின்ற நிதியாண்டின் பயன்பாட்டிற்காக, 2024 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க பகிரங்க நிதிசார் முகாமைத்துவச் சட்டத்தின் பிரிவு 16 இற்கிணங்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டு நிதியிலிருந்து அல்லது அரசாங்கத்திற்குச் சொந்தமான வேறு ஏதேனும் நிதியத்திலிருந்து அல்லது நிதியிலிருந்து அல்லது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தற்றுணிபின் பிரகாரம் அரசாங்கத்தால் பெறப்பட்ட ஏதேனும் கடன் தொகையிலிருந்து ரூபா இருநூற்று அறுபது பில்லியனை (ரூபா260,000,000,000) விஞ்சாத மேலதிக ஒரு தொகை செலுத்தப்பட வேண்டுமென்றும், அத்தகைய தொகையானது இங்கே அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு செலவிடப்பட வேண்டுமென்றும் இப்பாராளுமன்றம் பிரேரணை நிறைவேற்றுமாக:-

அட்டவணை

தலைப்பு	**240** -	வரவுசெலவுத்திட்டத் திணைக்களம்
நிகழ்ச்சித்திட்டம்	**02** -	அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்
		மீண்டெழும் செலவினம் ரூ. 10,000,000,000
		மூலதனச் செலவினம் ரூ. 250,000,000,000
		மொத்தச் செலவினம் ரூ. 260,000,000,000

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

† 2026 நவம்பர் 12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2027 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க குறைநிரப்பு மதிப்பீட்டைப் பார்க்க.

*

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர்,— குறைநிரப்புத் தொகை,— செலவினத் தலைப்பு 117 - நிகழ்ச்சித்திட்டம் 02 — †2026 சனவரி 01 ஆம் திகதியில் தொடங்கி 2026 திசெம்பர் 31 ஆம் திகதியில் நிறைவடைகின்ற நிதியாண்டின் பயன்பாட்டிற்காக, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டு நிதியிலிருந்து அல்லது அரசாங்கத்திற்குச் சொந்தமான வேறு ஏதேனும் நிதியத்திலிருந்து அல்லது நிதியிலிருந்து அல்லது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தற்றுணிபின் பிரகாரம் அரசாங்கத்தால் பெறப்பட்ட ஏதேனும் கடன் தொகையிலிருந்து ரூபா முப்பத்தொரு ஆயிரத்து எண்ணூற்று நாற்பத்தொன்பது மில்லியன் (ரூபா 31,849,000,000) தொகையை விஞ்சாத மேலதிக ஒரு தொகை செலுத்தப்பட வேண்டுமென்றும், அத்தகைய தொகை இங்கே அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு செலவிடப்பட வேண்டுமென்றும் இப்பாராளுமன்றம் பிரேரணை நிறைவேற்றுமாக:-

அட்டவணை

தலைப்பு	**117** -	போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு	
நிகழ்ச்சித்திட்டம்	**02** -	அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்	
		மூலதனச் செலவினம்	ரூ. 31,849,000,000
		மொத்தச் செலவினம்	**ரூ. 31,849,000,000**

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

† 2026 நவம்பர் 13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2026 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க குறைநிரப்பு மதிப்பீட்டைப் பார்க்க.

1 தொடக்கம் 8 ஆம் இலக்கக் குறைநிரப்பு மதிப்பீடுகளின் மொத்தம் ரூபா. 673,674,000,000 ஆகும்.

*** அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.**